# பொல்பிதிகம பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 20 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொல்பிதிகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) கணக்கு பட்டோலைகளில் கணித்தல் பிழைகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா 81,408 தொகையும், நடைமுறை சொத்துக்கள் ரூபா 16,976,796 தொகையும், நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 12,218,828 இனாலும் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் மாதம் தொடர்பாக நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 384,250 தொகை இற்கான பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

------------------------------------------

சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்த நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 1,747,483 ஆகும். அதே

போல் சபையின் மாதாந்த தவணைப்பணம் என ரூபா 15,474 தொகை வீதம் அந்த நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணம் சபையின் எந்த ஊழியர்கள் தொடர்பானது என சபை அறிந்திருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) நடைமுறை சொத்துக்களின் கீழ் செயற்திட்டக் கடன்பட்டோர் மீதி ரூபா 585,824 தொகை வருட ஆரம்பம் முதல் காணப்படுகின்றது.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 73,549,436 ஆக காணப்பட்டது. இவற்றில் அண்மித்த 0.24% ஆகிய ரூபா 174,716 தொகை 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் மீதிகளாக காணப்பட்டதுடன் இவற்றில் 03 மற்றும் 07 வருடங்கள் இடைப்பட்ட காலம் முதல் காணப்படும் ரூபா 54,519 இற்கான 09 கலவை வைப்புக்கள் மீதிகளும் 4 மற்றும் 5 வருடங்களிடையே காலம் முதல் காணப்படும் ரூபா 95,197 இற்கான 02 பலவின வைப்பு மீதிகளும் காணப்பட்டன.

02. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 387,498 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,339,107 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 951,609 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 117,517,019 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 102,234,414 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 15,670,103 வரை மிகையாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 41,098,095 தொகையில் மொத்தமாக 79% தொகை என ரூபா 32,664,629 தொகை சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 117,517,019 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 40,710,598 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 71% என ரூபா 28,786,651 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 97% ஆகிய ரூபா 27,921,091 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி

ஆணையாளரினால் வழங்கப்பட்டு ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மூலதன செலவு ஆகிய ரூபா 102,234,414 தொகையில் மொத்தமாக சுமார் நூற்றிற்கு 1 என ரூபா 569,467 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் மீதியான 99% ஆகிய ரூபா 101,664,947 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்கள் அடங்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

---------------------------------

2.3.1 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,553,425 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,409,594 தொகையுமாகும்.

03. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 பயன்படுத்தப்படாமை மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------------

மோட்டார் கிரேட்டர், டிபர் வண்டி, பாதை தகர்க்கும் இயந்திரம், க்ரூ கப் வண்டி மற்றும் டிரக்டர் என்பன பதிவு செய்யப்பட்டு காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் பயன்படுத்த முடியாதுள்ளது. அதே போல வேறு 4 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது பயன்படுத் முடியாத நிலைமையில் காணப்பட்டது.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்